ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

पारतन्त्र्यात्परं दुःखं न स्वातन्त्र्यात्परं सुखम् ॥

மனிதர்களுக்கு பிறருக்கதீனமாயிருப்பதைக் காட்டிலும் அதிகமான துக்கம் வேறு இல்லை. அவ்விதமில்லாமல் ஸ்வதந்திரனாயிருப்பதைக் காட்டிலும் சுகமென்பது வேறு இல்லை.

அதாவது தனக்கிருக்கும் தாரித்தரிய தசையாலோ, அல்லது அதிகப்பொருள் சம்பாதிக்க வேண்டுமென்கிற பொருளிலிருக்கும் அவாவாலோ, பிறருக்கு அடிமையாகி அவர்களிட்ட வேலையைக் கட்டளைப்படி சட்டமாய் செய்கிறேனென்று அங்கீகரித்து ஊழியத்திலமர்வதே பெரும் துக்கம். ஏனென்றால் வேலைக்காரனென்றும், யஜமானனென்றும், நிலைமையை யடைந்துவிட்டால், அந்த யஜமானன் தன்வேலைக்காரன் எவ்வளவு சரியாய் தன்காரியங்களை நடத்தினாலும், அவன் பேரில் தவறு கூறாவிட்டால் தனக்கிருக்கும் யஜமானன் என்கிற பெயருக்கு மிகவும் குறைவென்று நினைத்து எவ்விதம் அனுஸரித்தாலும் அதை ஒப்புக்கொள்ளாமல் இவன் பேரில் அவதூறையே கூறுவான் இந்த அபிப்பிராயத்தையே,

मौनान्मूकः प्रवचनपटुर्वाचको जल्पको वा
धृष्टः पार्श्वे भवति च वसन् दूरतोऽप्यप्रगल्भः ।
क्षान्त्या भीरुर्यदि न सहते प्रायशो नाभिजातो
सेवाधर्मः परमगहनो योगिनामप्यगम्यः ॥

வேலைக்காரன் யஜமானன் வார்த்தைக்கு பதில் சொல்வது உசிதமில்லையென்று மௌனமாயிருந்தால், ஊமை என்று நிந்திக்கிறான். கேட்டகேள்விக்கு உசிதமாய் பதில் கூறினால் அதிக வார்த்தையும் அனுசிதமான வார்த்தையும் பேசுவதாகக் கருதுகிறான். தம் பக்கத்தில் வந்து நின்று மரியாதையாயிருந்தால் என்ன தைரியமென்று கோபித்துக்கொள்கிறான் தூரத்தில் விலகி நின்றால் கொஞ்சங்கூட தைரியமில்லாதவனென்று சொல்கிறான். பொறுமையுடனிருந்தால் பயந்தவனென்கிறான். ஆகையால் ஒருவருக்குள் ஸேவகாவிருத்திசெய்வது முக்காலமுமறிந்தயோகிகளுக்கும் சிரமம். ஸ்வதந்திரனாயிருப்பதே மேன்மையாகும்.

சிராத்தம்.

(சOக-வது பக்கத்தொடர்ச்சி).

ஒருவருஷத்தில் ஒருநாள் நம்மால் செய்யப்படும் சிராத்தத்தினால் அவர்களுக்குப் பசியில்லாமல் எப்படியிருக்கும் என்கிற சந்தேகத்தை விசாரிக்கிறோம். நம் பிதுர்களுக்குச் சுக்லபக்ஷம் ராத்திரி என்றும், கிருஷ்ணபக்ஷம் பகலென்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. நாம் செய்யவேண்டிய சிராத்தங்கள் அமாதர்ப்பணம் முதலான 96 ஆகின்றன. இதர சிராத்தங்களை நாம் செய்யாமல் விட்டுவிட்டாலும், அமாசிராத்தம், மாஸஸங்கிரமண சிராத்தம் இவ்விரண்டையும் செய்து கொண்டு வருகிறோம். இதுவே ஒருநாளைக்கு இரண்டுவேளை ஆய்விட்டது. இது தவிர, இன்னும் பல ஸமயங்களில் சிராத்தம் நடத்துகிறோம். ஆகையால் அவ்வித சங்கைக்குமிடமில்லை. நம் பிதுர்க்கள் முக்தர்களாயிருந்தாலும் நம்முடைய சிரேயஸ்ஸை யுத்தேசித்து அவசியம் சிராத்தம் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்களால் வற்புறுத்தப்பட்ட இந்த கர்மாவை தன்னுடைய க்ஷேமத்திற்காகச் செய்யத்தான்வேண்டும். மேலும் அவர்கள் முக்தர்கள் என்று நம்மால் அறிந்துகொள்ளச் சாத்தியமில்லாதபடியாலும் சிராத்தத்தை விடக்கூடாது. இவ்விதம் நம் பிதுர்க்களை யுத்தேசித்து சிராத்தம் செய்யாவிட்டால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களென்றும் தெரிகிறது. இக்கருத்தைக்கொண்டுதான் கீதையின் முதல் அத்தியாயத்தில்

पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ।

சிராத்தத்தில் பிண்டதானம் திலதர்ப்பணம் முதலியவைகள் இல்லாமல் பிதுர்க்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று பகவானும் சொல்லியிருக்கிறார். மகாபாரதத்திலும், ஜாத்காருவின் உபாக்கியானத்தால் நன்கு வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது, ஜாத்காரு என்கிற ஒரு ரிஷி பிர்மசர்யா சிரமத்திலிருந்துகொண்டு வனத்தில் சஞ்சாரம் செய்யுங்கால் ஒரு பள்ளத்தில் தலை கீழாகவும் கால்கள் மேலாகவும் எலிகளால் ரகசியமாய் ஒருவளையில் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஒரு திருணத்தின் பூங்கொத்தைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறவர்களைக் கண்டார். உடனே அவர்களருகிற் சென்று "நீங்கள் யார்" என்று வினவ, அவர்கள்கூறும் விடையாவது, "நாங்கள் யாயாவராளென்கிற பெயர்கொண்ட ரிஷிகள், எங்கள் வம்சத்தில் ஸந்ததிகளில்லாமல் குறைந்து போய்விட்டபடியால் இப்பள்ளத்தில் விழுந்து இவ்விதம் தொங்குகிறோம். ஜாத்காருவென்று பெயர்கொண்ட ஒருவன்மாத்திரம் இருக்கிறான் அவனால் நாங்கள் கொஞ்சம் பிடியுள்ளவர்களாய் இருக்கிறோம்." என்று பதில்கூறி எங்களையுத்தேசித்து இவ்விதம் வியசனப்படும் நீ யாரென்று அவர்கள் வினவினார்கள். அதைக்கேட்டவர், "நான்தான் ஜாத்காரு, நான் தங்களுக்கு என்ன செய்யவேண்டும்" என்றுகேட்க, "நீ நல்ல புத்திரனுண்டாகும் பொருட்டு, விவாகத்தில்பிரயத்தினம் செய்யவேண்டும், நல்ல புத்திரர்களை யடைந்தவர்கள் அப்புத்திரர்களால் எவ்வித பலன்களை படைவார்களோ அப்பலன்களை தபஸ்ஸுகளால் அடையமுடியாது" என்று அவர்களாலுரைக்கப்பட்ட வசனத்தைச் செவியுற்ற ஜாத்காரும் தன் பெயர் பொன்ற பெயரைவகித்த கன்னிகை கிடைத்தால் விவாஹம் செய்துகொள்ளுகிறேனென்று அங்கீகரித்து, அவ்விதமே கிடைத்த ஒரு ஸ்திரீயை மணம்புரிந்து அவளிடத்தில் சாஸ்திரானுசாரமாய்ச் சிறந்த ஒரு புதல்வனை யுண்டுபண்ணி பிதுர்க்களை கிருதார்த்தர்களாய்ச் செய்தார். என்று ஆதிபர்வாவில் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. யக்ஷப்பிரசனத்தில் தர்மபுத்திரனைத் தவிர பாக்கி நான்குபோகளும் ஒரு குளத்தில் நீர்

அருந்தி அக்கரையிலேயே சவமாய்க் கிடக்கும்பொழுது தர்ம புத்திரர் அங்குசென்று அவர்களைப் பார்த்து, "விசேஷமான துக்கத்தையடைந்து குந்தியான நம் தாயாருக்கு சிராத்தம் செய்ய நான் உயிரோடிருக்கிறேன். ஆகையால் என் தம்பிகள் ஜீவிக்காவிட்டாலும், மாத்ரிக்கு சிராத்தம் செய்யும்பொருட்டு நகுலன் ஜிவிக்கவேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதிஹாஸம் என்று பெயர்பூண்ட வேதபாகத்தில், மஹாளய சிராத்தத்தை நிரூபிக்குமிடத்தில் சூரியன் கன்னியா ராசியை எப்பொழுது அடைகிறாரோ அப்பொழுது பிதுர்க்கள் கிருகத்தையடைந்தவர்களாய்க்கொண்டு சூரியன் விருச்சிக ராசிக்கு வருகிற பரியந்தம் புத்திராகளால் செய்யப்படும் மஹாளய சிராத்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

இவ்விதம் பல வசனங்களிருக்கின்றன. ஆகையால் श्राद्धम् அவசியம் செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது. அப்படிச் செய்வதினால் நாம் தோஷத்திற்கும் பாத்திரமாகாமல் விசேஷ சிரேயஸ்ஸையுமடைகின்றோம்.

ये यजन्ति पितॄन् देवान् ब्राह्मणान् सहुताशनान् ।
सर्वभूतान्तरात्मानं विष्णुमेव यजन्ति ते ॥
आयुः पुत्रान् यशः स्वर्गं बुद्धिं पुष्टिं बलं श्रियम् ।
पशून् सुखं धनं धान्यं प्राप्नुयात् पितृपूजनात् ॥ इति बृहस्पतिः

என்கிற இந்த வசனங்களால் பிருஹஸ்பதியும் தெரிவிக்கிறார். இதுவரையில் நிரூபிக்கப்பட்ட சாஸ்திரங்களாலும் யுக்திகளாலும் பெரியோர்களின் அனுஷ்டானங்களாலும் ஐஹிகம் ஆமுஷ்மிகமென்கிற இருவிதமான பயனை அடையவேண்டியதின் பொருட்டும் அவரவர்களின் பிதுர்க்களை நற்கதியடையும்படி செய்வதற்காகவும் புத்திரன் முதலானவர்களால் சிராத்தமென்கிற இந்த கர்மா அவசியம் செய்யவேண்டுமென்றும் அவ்விதம்

செய்யாவிட்டால் அதிக பாபத்திற்குள்ளாகிறார்கள் யென்றும் தெரிகின்றபடியால் எல்லா ஜனங்களும் அதைவிடாமல் அவரவர்களின் சக்திக்கியன்றமட்டில் நியமங்களைவிடாமல் அனுஷ்டித்துக் கிரார்த்தர்களாக வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறோம்.

சுபம்.

ஸ்ரீ ராமவிஜயம்.

(கூகூ-வது பக்கத்தொடர்ச்சி)

உன்னைப்பார்த்ததில் சில ரகஸ்யசங்கதிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. என்னை கல்யாணம்செய்து கொண்டு அயோத்திக்குவந்ததும், இரவில் புஷ்ப சந்தன தாம்பூலங்களெடுத்துக் கொண்டு ஏகாந்தத்தில் நாதரிடம் சென்றேன். அவர் என்னை அங்கீகரிக்காமல் பெண்ணே! வில்லை வளைத்ததற்காக, சொல்லை நிறைவேற்ற வேண்டி உன்னை உனது தந்தை எனக்குத் தந்தனன். எனது குலசீலாதிகளைப் பார்த்துக் கொடுத்தானில்லை. ஒருராக்ஷஸன் இந்த வில்லை வளைத்திருந்தால் அவனுக்கு உன்னைக் கொடுத்திருப்பான். நான் வில்லாளி என்பதைக்காண்பிப்பதற்கு வில்லை வளைத்தேன். சபையில் அவமானப்படுத்தக்கூடாதென்று உன்னைபாணிக்கிரஹணம் செய்துகொண்டேன். உன்னிடத்தில் எனக்கு ஆசையில்லை. போகலாம் என்று பேசினார். மிகுந்தஆசையுண்டாகும்படி செய்கிறேனென்று அவரை உபசரித்தேன் விசிறி யெடுத்து விசிறினேன். சாமரங்கள் போட்டேன். கைகளால் சுகமுண்டாகும்படி அவரங்கங்களைப் பிடித்துவிட்டேன். அப்பொழுது என்னருமை மோதிரமே என்கையிலிருந்தாய் பாதத்தைப்பிடிக்கத் தொடங்கும்போது அகல்யையின் விருத்தாந்தம் ஞாபகத்திற்கு வரவே கால் பிடிக்காமல் நிறுத்திவிட்டேன். ஸாதாரணமானகல்லை அழகிய பெண்

ணுக்கிய அவர் பாதம் பட்டால் உன்னிடத்திலுள்ள ஒன்பது ரத்னங்களும் ஒன்பது லாவண்யப் பெண்களாய்க் குதித்து நின்று எனக்கு ஸபத்னிகள் ஆகிவிடும் என்று பயந்து அப்படிச் செய்தேன். அப்படி சக்களத்திகளை யுண்டாக்கி எனக்கும் ஸ்ரீ ராமருக்கும் விரோதத்தைச் செய்வாயென்று நான் நினைத்த நீயே இப்பொழுது இராமனோடு என்னைச்சேர்க்க சகியாய் வந்தனை உனக்கு நான் என்ன கைமாறுசெய்யப்போகிறேன் என்று இவ்வாறெல்லாம் அம்மோதிரத்தைப் புகழ்ந்தாள். அநுமானைப் பார்த்து சீதையான என்னை ரக்ஷிக்க வந்த தங்களைப் போன்ற சாதுக்களைக் காணக்கிடைக்காது. கோடி கோடியாய் நிற்கும் பரம துஷ்டர்களான ராக்ஷஸர்களை அலக்ஷியம் செய்து அபாரமான கடலைத்தாண்டி இவ்விடம்வந்த தங்களை சாதாரண வானரமாக நினைக்கக்கூடுமா? மகாபரிசுத்தரான தங்களுடன் ஸல்லாபிக்க நான் கொடுத்து வைத்தவளானேன். இவ்வளவு பெருமையும் பராக்கிரமமும் உள்ளவர்களானதால்தான், ராமன் உங்களைப் பொறுக்கியெடுத்து என்னிடம் அனுப்பினர். நல்ல வேளையாய் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் க்ஷேமத்தைத் தங்கள் முகமாய் அறிந்தேன். என்னிடத்தில் விசேஷமான அன்பு பூண்ட என் நாதன் என்னைக்காணாத துயரத்தால் வாடிவதங்கியிருப்பாரென்றே நினைக்கிறேன். ஸுக்கிரீவனென்னும் மித்திர ரத்தினம் கிடைத்தால் அவரது துயரம் ஒருவாறு ஆறியிருக்கும். சீக்கிரத்தில் என் நாதனை நான் இங்கு காணக்கூடுமா? வானர சைன்னியங்களுடன் கூடிய ஸுக்கிரீவன் என் நாதனை இவ்விடம் கொண்டு வந்து சேர்ப்பாரா? ராமனுடைய தீக்ஷணமான பாணத்தினால் அடிபட்டுத் தரையில் புரளும் ராவணனை குளிரக் குளிர என் கண்கள் பார்க்குமா? என, அநுமான் அம்மா! சந்தேகம் வேண்டாம். தங்கள் கவலையெல்லாம் இந்த நிமிஷத்திலேயே போய விட்டன வென்று எண்ணிக்கொள்ளுங்கள். உங்கள்நினைவே நினைவாய், இரவையும் பகலையும் உறக்கமின்றிப் போக்கும் ஸ்ரீ ராமன் ராவணாதிகளையெல்லாம் வென்று ஜயஸ்ரீயுடன் தங்களை இப்பொழுதே அழைக்கவரப் போகிறார்

அல்லது அதுவரையில் தான் தாமதிப்பானேன். எனது முது கின்மீது ஏறுங்கள். ஒரு நொடியில் தங்களை ராமனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன், என்றார். இதைக்கேட்ட சீதை புன்னகை புரிந்து வானர ஜாதிக்குரிய அறியாமையைக் காட்டுகிறீர். இவ்வல்பசரீரமுள்ள நீர் என்னை யெடுத்துக்கொண்டு சமுத்திரம் தாண்டுவேன் என்று சொல்லுகிறீரே என்று கேட்க அனுமான் அம்மா! அப்படி நினைக்கவேண்டாம். தங்கள் கிருபை இந்த ஸமுத்திரத்தைப்போல் மற்றும் அநேக சமுத்திரங்களைத் தாண்டும்படி என்னைப் பெரிதாக்கும். இதோ பாருங்களென்று வாமன பகவானைப் போல வர வர உயரந்தார். ஆகாயத்தையளாவிய உருவங்கொண்டு அம்மா! இந்த இலங்கை இதோ காணும், மலைகள், நதிகள் முதலிய யாவையும் சேர்த்துத்தூக்கி யெடுத்துப் பந்தாட என்னால் முடியும். தங்கள்கிருபைக்குப் பாத்திரமான என்னை இவ்வளவு உபாயமாய் நினைத்துவிட்டீர்களே எனவே, ஸீதை மகானுபாவ! உமது சக்தியெல்லாம் அறிவேன். ஏதோ பரீக்ஷித்தேன். நான் உம்முடன் கூடவருவது அழகில்லை. மற்றும் அநேக விக்கினங்கள் மத்தியில் ஏற்படும். அநேகம் ராக்ஷஸர்கள் உம்மைத் தடுப்பார்கள். நீர் அறியாமலே பயத்தினால் நான் அறண்டு சமுத்திரத்தில் விழுந்துவிடக்கூடும். எவ்வளவு நீர் பக்தனானாலும் புத்தி பூர்வகமாக நீர் என்னைத் தொடும்படி செய்வது பதிவிருதைகளுக்குத் தகாத காரியமாயிருந்தேன், ஸ்ரீ ராகவன் ராவணாதிகளை நிக்கிரஹித்துத் தேவர்களும் யாவர்களும் பார்க்க என்னை எடுத்துச் செல்வதே அவரது வீரத்தனத்திற்கு உரித்தான காரியமாகும். ஆதலின் வேகமாய்த் திரும்பிச்சென்று என் நாதனை இவ்விடம் வரும்படி செய்வீர்களென்று உரைத்தாள். ராமனிடத்தில் நான் யாது சொல்கிறது, என்று அனுமான் கேழ்க, ஸீதை தங்கள் பாதத்தில் இணையற்ற பக்தியுடைய என்னை உபேக்ஷிக்கலாமா? தங்களது வீரியத்தைச்செலுத்தினால் என்னை இந்தக் கொடிய ராக்ஷஸனிடமிருந்து விடுவிப்பது ஒரு பெரிய காரியமா? தாங்கள் நித்திரை புரியும்போது மூக்கினால் என்னைக்

காயப்படுத்திய காகாஸுரனை ஒரு புல்லையெடுத்து எறிந்தமாத்திரத்தில் ஸகல லோகமும் சென்று, பிரம்மாதிதேவர்களைச் சரணமடைந்தும், ஒருவரும் இரக்ஷிப்பாரில்லாமல் தங்களையே மறுபடியும் வந்து சரணமாயடைந்ததின்பேரில் அவனது ஒரு கண்ணைமாத்திரம் அந்தப் புல்லாயுதத்திற்கு இறைபாக்கி, மற்றக் கண்ணுடன் தாங்கள் ரக்ஷிக்கவில்லையா? அந்த சமயம் தங்களை நமஸ்கரித்து ஆகாயத்தில் விமானத்திலிருந்த தசரதரையும் நமஸ்கரித்து இந்திர குமாரனுன ஜயந்தன் என்னும் காகாஸுரன் உங்களைப் புகழ்ந்து சொல்லவில்லையா? அந்த துஷ்டனிடத்தில் அவ்வளவு கிருபைசெலுத்திய தாங்கள் சீதையான என்னைக் கைவிடலாமா? ஒரு புல்லைக்கொண்டு அவனைக் கதறக் கதற அடித்த உங்களுடைய வீர்யம் இப்பொழுது எனக்காகத் துணைவரக்கூடாதா? இன்னம் இரண்டுமாதங்கள்தான் இராவணன் எனக்குத் தவணை கொடுத்திருக்கிறுன். அதற்குள் தாங்கள் வராவிடில் எனது நகக்கண்களையும் தாங்கள் காணமுடியாது என்று சொன்னதாக இராமனிடம் சொல்லுங்கள். அடையாளததிற்காக இக்த சூடாமணியைக் கொடுக்கிறேன். இதை ராகவனிடம் சேர்ப்பியுங்கள், என்று அவ்வாபரணத்தை யெடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு அனுமான் போய் வருகிறேன் யென்று பிறப்பட சீதை கண்களில் நீர்த்ததும்ப ஸ்ரீ ராமனுக்கு என்னுடைய க்ஷேமங்களைச் சொல்லுங்கள். சுக்கிரீவனையும் விசாரித்ததாகச் சொல்லுங்கள். வீரனே! ராமன் வந்து என்னை ரக்ஷிக்கவேண்டிய விஷயத்தில் தங்களையே நம்பியிருக்கிறேன். தங்களைக் கண்டதால் சிறிது துக்கத்தை மறந்திருக்கிறேன். நீங்கள் போய் விடுகிறீர்களேயென்று மறுபடியும் வியசனம் மேலிடுகிறது. எங்கேயாவது சிரமபரிகாரம்பண்ணிக் கொண்டு இரண்டொருநாள் இருந்துவிட்டுப் போனுல் சந்தோஷமாயிருக்கும் என்று சொன்னுள். அனுமான் தேவியை சமாதானம் செய்து அவளிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு மற்ருரிடத்தில் வந்து யோஜிக்கலாயினர். தேவி, தாமதிக்கும்படி சொன்னதில் ஏதோ காரியமிருக்கிறது. ஸீதாதேவியைக்

கண்டேன் என்று ராகவனிடம் சொன்னதும் ராமன் லங்கையின் பலாபலத்தை விசாரிக்கக்கூடும். நமது பராக்கிரமத்தைக் கொஞ்சம் காண்பித்தால் ராவணனைப்பார்க்க நேரிடும். சமாதானத்திற்கு அவன் உடன்பட்டால் ராகவனுடைய காரியம் எளிதாகும். ஸாமதான பேதங்களுக்கு உட்படாவிட்டால் இவனும் லேசானவனில்லை என்று நினைக்கும்படி நான் செய்துவிட்டுப்போவது நலம். நம்முடைய பராக்கிரமத்தைக்கொண்டு கணக்கிட்டுப்பார்த்தால் வானரவீரர்களின் ஸஹாயமுடைய ஸ்ரீராமனை எதிர்க்கமுடியாதென்று அறண்டுவிடுவான். நாம் திரும்பி ஸ்ரீராமனுடன் வருகிறவரையில் ஸீதையின் ஜோலிகளுக்குப்போகமாட்டான், என்று மனதில் இப்படியெல்லாம் முடிவு செய்துகொண்டார். அவ்வனத்திலுள்ள மரங்களை யெல்லாம் ஒடிந்துவிழச்செய்தார். சமீபத்திலுள்ளகட்டடங்களைஇடித்தார் வனம் கலகலத்தது. பயகரமான ரூபத்துடன் ராக்ஷஸிகள் வந்து அதட்ட இவர் அவர்களை விரட்டினார். அவர்கள் ஓட்டம் பிடித்தனர். சிலஸ்திரீகள் சீதையினிடம் சென்று, இவன் யார்? என்று கேழ்க்க, உங்களுக்குத்தான் தெரியவேணும், பாம்பின் கால் பாம்பிற்குத்தெரியும், இவன் யாரோ, இவனும் ஒரு ராக்ஷஸனாக இருக்க வேண்டும், எனக்கும் இவனைப் பார்க்க பயமாயிருக்கிறது, என்றுபதில் சொன்னாள்.

(இன்னும் வரும்)

ப. கே. கல்யாணராம சாஸ்திரி

ஸ்ரீ தியாகராஜ சுவாமி சரிதம்.

(கககூவது பக்கத்தொடர்ச்சி.)

அந்நாளில் இத்தேச அரசன் தன் அரண்மனைக்கு வரவேணுமென்று அழைக்கவே இவர் செல்ல மனமில்லாது கீர்த்தனம்பாடி நரஸ்துதியாலும், பரிசுவாங்குவதிலும் இஷ்டமின்றி

இருந்துவிட்டார். ராஜன் கோபங்கொண்டு மறுபடியும் இவரை அழைத்துவரும்படி சேவகர்களையேவி கூப்பிட்டுவரத் திட்டஞ் செய்ததை அறிவிக்க, அதற்கு இவரோ, "சேவகர்களே சாதாரண ராஜாவிடத்தில் தியாகராஜா வரான்" என்று வினவுங்கள் என்றபடியே சேவகர்கள் ராஜாவிடம் அறிக்கைசெய்ய, அரசன் அதிகக் கோபங்கொண்டவராய் இவரை எவ்விதத்திலாவது தனதரண்மனைக்கு அழைத்துவர எண்ணினான். உடனே அவ்வரசனுக்குப் பொறுக்கமுடியாத வயிற்றுவலி யுண்டானதையறிந்து தான் நினைத்த அபாராதத்தினால் நேர்ந்த விஷயத்தை இவர் வீட்டுக்கு அரசன்வந்து தெரிவித்து இவரின் காலில் விழவே, ராஜாவின் நோய்தீர பகவானைபிரார்த்தித்து ரோகத்தைத் தீர்த்துவைத்தார்.

பின் தனதுமாணாக்கர்களுடன் திருப்பதி மலைக்குசென்று ஸ்ரீ அலமேலுமங்கை சமேத ஸ்ரீநிவாஸனது திருக்கோயிலுக்குச்சென்று தரிசிக்க சந்நிதிக்கேகினர். ஏகவே, திரைபோட்டிருப்பதைப்பார்த்த இவர் பகவானைத் தரிசிக்கமுடியாததால் தன் பாபமே திரையாகவந்து மறைக்கிறதேயொழிய வேறு இல்லைஎன, 'திரதீயகாராதா' என்ற கீர்த்தனைசொல்லவும் திரையறுந்து கீழேவிழுந்துவிடவும், ஸ்ரீ வெங்கடாஜல மூர்த்தியைச் சேவை செய்து துதித்துத் திரும்பிவரும்போது கோவூர் சிவஸ்தலத்திலிருந்த சுந்தரேசமுதலி இவர் வரவைக் கேள்வியுற்று எதிர்கொண்டழைக்கவே, அவ்வூரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தரேசுவரனை 'ஈவஸுதா நீவண்டி, என்ற கீர்த்தனங்கள்பாடி ஒருவாரம்வசித்து அங்கிருந்து இவர் வரும்போது பக்தனாகிய சுந்தரேசமுதலி இவரின் வைராக்கிய சித்தத்தை நன்கறிந்து ஒன்றும் கிரகிக்கமாட்டாரென்று தீர்க்கமாயெண்ணி இவருக்குத் தெரியாமல் இரகசியமாய் ஆயிரம் ரூபாய்கள் நிறைந்த ஓர் பையை இவரின் பல்லக்கிலிருக்கிற பெட்டிக்குள் வைத்துச் சீடர்களிடம் சங்கதியைச் சொல்லியனுப்பவே, பொழுதுவிடிய ஒரு ஜாமநேரம் இருக்கும்போதே

சிஷ்யர்கள் பல்லக்கைச் சுமந்துகொண்டு செல்லவே, இருபக்கமும் காடுகள்நிறைந்து பயங்கரமாயிருக்கும் பாதையே போய்க்கொண்டிருக்கையில் சில கள்வர்கள் பல்லக்கைச்சுற்றி நின்றுகொண்டு சுண்டுவில்லினுல் சிறிய கற்களைக்கொண்டு பல்லக்கை குறிப்பிட்டடித்தனர்.

இவர் பல்லக்கைச் சுமக்கும் சிஷ்யர்களுடன் சூழ்ந்துவரும் சிஷ்யர்களும் மிகப்பயந்து, "சுவாமி, கள்வர்கள் வந்துவிட்டார்களே. என்ன செய்வோம். பயமாயிருக்கிறதே" எனக்கூவவும், இவர் நமக்கென்ன பயம். "நம்மிடமென்ன இருக்கிறது" என்றபோது, சிஷ்யர்கள் பணிந்து "சுவாமீ கோவூர் சுந்தாமுதலி ஆயிரம் ரூபாய் நிறைந்த பையைச்சிவிகையின் பெட்டிக்குள்வைத்திருக்கிறுர்" எனப்புகலவும் பல்லக்கை இவர்நிறுத்திக்கொண்டு பகவானை நோக்கி "ஓ, கஜரட்சகா அதிவிரைவில் எங்களைக்காத்தருளும்" எனப்பகவான்மீது கீர்த்தனங்கள் பாடவே, ஸ்ரீராமபிரானும், லக்ஷ்மணரும் கண்டோர் திடுக்கிடத்தக்க சேவகர்களைப்போல் சிவிகையின் இருபுறமும் நின்று கள்வர்கள்மேல் பாணந்தொடுத்துத் திருடர்களின் அங்கத்தை துளைத்துக் காயங்களால் நோயுண்டாக்கி அவர்களினுயிரை நீக்காதுவிரட்டியடித்தனர். அடிக்கவே,கள்வர்கள் கொஞ்சதூரமோடிப்பதுங்கி நின்று பல்லக்கினிருபுறத்தினின்று தம்மைத் துரத்தியடித்திட்ட சேவகர்களின் அழகையும் வெகு நேரம் நேத்ரானந்தமாயின்புற்று நோக்கிக்கொண்டே நிற்கப் பொழுதும் புலர்ந்தது. சேவகர்களாய்க் காத்துவந்த பகவானும் மறைந்தார்கள். இவைகள் இச்சிவிகையினுள்ளிருக்கும் இவருக்கேனும் இவர் சிஷ்யர்களுக்கேனும் தெரியா. விடிந்தபின் கள்வர்களனைவரும் இவர் பல்லக்கின் பக்கல் வந்து, "ஏ, குருசுவாமியே, நாங்கள் திருடர்கள். சமுகம் களவாடவந்தோம். உங்கள் சேவகர்கள் பல்லக்கின் இருபுறங்களிலும் நின்று எங்களைப் பாணங்களாலெய்து துன்பப்படுத்தித் தங்கள் பொருளைக்கவரவிடாது எங்களை இரவு ஓடும்படிச்செய்து தங்கள் சிவிகையைச் சார்த்துப் பக்கங்களில் வந்துகொண்டிருந்தார்களே அவ்விருவர்

களும் எங்கு சென்றார்கள். அவர்களினழகைப் பார்க்கப்பேரானந்தமாகிறது. சன்மார்க்கமுற மனதிழுக்கிறது." எனவும் இவர் பகவானே இவ்வாறமைந்து வந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்துத் தமது நேத்ரங்களில் நீர்ததும்ப, "ஏ கள்வர்களே நீங்கள் கண்ட சேவகர்களைத்தயையுடன் என்முன் காண்பியுங்கள் இதோயிருக்கிற ஆயிரம் ரூபாயையும் உங்களுக்குக்கொடுத்துவிடுகிறேன். எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சிவிகையிலிருந்த பையைக் கீழே தள்ளினர். உடனே கள்வர்கள் அதிஆச்சரியங்கொண்டு இக்குருமூர்த்தியைப் பார்த்து "சேவகர்கள் நின்றது தெரியாது, ஆயிரம் ரூபாய் எங்களுக்கீந்து எங்களாலா அவர்களைப் பார்க்கப்போகிறீர்கள்" எனத்திகைத்து நிற்கவும், இவர், "ஓ கள்வர்களே, என் குலக் கடவுளாகிய ஸ்ரீராம, லட்சுமணர்களை நேத்திரானந்தமாய்ப் பார்த்தவுங்கள் பாக்கியமே பெரியபாக்கியம். முன் ஜன்மாந்தரங்களில் செய்த தவப்பயனாலேயே ஸ்ரீராமலக்ஷ்மணர் தரிசனம் உங்களுக்குக்கிட்டிற்றேயன்றி வேறு இல்லை. யான் பார்க்க இப்போது கொடுத்துவைக்கவில்லையே" என்று கண்ணீர் ததும்பியொழுக, கீர்த்தனங்கள் பாடினர். அங்கு வந்திருந்த திருடர்களெல்லாம் இவரின் மெல்லியபாதத்தில் விழுந்து "ஸ்ரீராமபக்தர்களுக்குப்பக்தராக நாங்களிலங்குவோம்." என இக்குருமூர்த்தியின் சிவிகையைச்சுமந்து வனங்கள் மார்க்கமாய் வரவே, ஓர் அக்கிரகாரம் தோன்றியது. அவ்விடமிருக்கும் ஆலயவாயில்முன் அனேக ஜனங்கள் கூடி நின்று துயரக்குறியுடன் நோக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த இவர் சிஷ்யர்களைக்கொண்டு விசாரித்துத் தெரிந்து சென்று பார்க்கவே, ஓர் பிராம்மணன் தன் பத்தினியையும் கைக் குழந்தையையும் பரதவிக்கவிட்டு அக்கோவில் கிணற்றில் விழுந்து இறந்து கிடப்பவனை ஹரிதாஸன் என்று அறிந்து அவனுக்கு உயிரளிக்கவேண்டுமென்று ஸ்ரீராமஸ்துத்யம் செய்ய அவனுயிர் பெற்றெழுந்து தனக்கிவ்விதம் நேர்ந்த விபரங்களை வினவி இவர் பாதங்களில் சாஷ்டாங்கநமஸ்காரம் செய்து நிற்க, இக்குருநாதர் தம்பதிகளை ஆசீர்வதித்து அவர்களைத்

திருப்பதிக்கு மகிழ்வுடன் செல்லச்செய்து இருவரும் பஞ்சநதம் வந்து சேர்ந்து திருடர்களாகிய பல்லக்கு சுமந்து வந்த பக்தர்களுடன் அனேக சிஷ்யகோஷ்டிகளோடு இவ்வூரிலேயே இன்புற்றிருந்து வந்தார்.

இவர் பூலோகவைகுண்டமாகிய ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீரங்கநாயகிஸமேத ஸ்ரீரங்கநாதனை வணங்கி, கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு, மத்யார்ஜுனக்ஷேத்திரமுற்று ஸ்ரீ நன்முலேயம்மன் சமேத ஸ்ரீமஹாலிங்கமூர்த்தியைத் தரிசித்து, ஸ்ரீ கோவிந்தபுரத்தில் அதிஷ்டானமாய் விளங்கும் ஸ்ரீ போதேந்திரஸ்வாமி அவர்களை வணங்கியும், ஸ்ரீதர வேங்கடேச ஐயா அவர்களைச் சாலக்கொண்டாடி, நாகபுரிக்குச்சென்று இப்பஞ்சநதக்ஷேத்திரம் வரவே, இவர், வரவை எதிர்பார்த்திருந்த சங்கீத மஹா வித்வானகிய அநந்தசயனம் கோவிந்ததாஸ் இவரை நமஸ்கரித்து, "சுவாமி நான் வினவும் ஸங்கீத சாகித்யங்களைக்கேட்டு அனுக்கிரகிக்கவேண்டும் எனப்பிரார்த்திக்க அவ்வாறே அவரது ஸங்கீத ஸாஹித்தியங்களைக் கேட்டு ஆனந்தமாகக் கொண்டாடினர்.

இதன் சிலநாட்களுக்குப் பிறகு காசியிலிருந்து ஓர் பக்தன் இவ்வூருக்கு வந்து இவரை நமஸ்கரித்து "சுவாமி, நான் இருப்பது காசி க்ஷேத்திரம். ராமேசுவர யாத்திரைக்கேகி வரும்போது பகவான் என் கனவில் தோன்றி 'காவேரியாற்று வடகரையில் "பஞ்சநதம்" என்ற திருவையாற்றிலே தியாகராஜன் எனது பக்தன், அவனைத்தரிசித்துச் செல் எனத்தெரிவித்தபடி தரிசனம் பெற்றேன்" எனவும், "தாஸரதே நீரணமு" என்ற கீர்த்தனம் புகன்ருனந்தமுற்றுர். இவ்வாறு அனந்த கீர்த்தனங்கள் பாடி இவருக்கெண்பத்தெட்டாம் வயதில் பகவானை மோட்சமளிக்கப்பிரார்த்தித்து மனமுருகப்பாடிய கீர்த்தனங்களால் ஸ்ரீராமபிரான் இவர் முன்தோன்றி "நீ, சன்னியாஸஞ்செய்து கொள். ஏழாவது தினத்திலுனக்குப் பதவி" எனச்சொல்லி மறைய, இவர் அங்கம் புளகாங்கிதங்கொண்டு

ஷக்களிப்போடு வேதவித்துக்களாகிய பிராமணோத்தமர்கள் பலரும், பாகவதோத்தமர்கள் பலரும், சிஷ்யவர்க்கங்கள் பலரும் நிறைந்துள்ள தம்வீட்டில் ஸன்னியாஸம் செய்துகொண்டு பகவான் புகன்ற தினத்தை எதிர்பார்த்திருக்கவே, ஏழாவது தினமாகிய கலியுகம் 4948 "நாலாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டில்" பராபவ-ஷூ புஷ்யபகுள பஞ்சமி திதியில் இவர் சிரஸிலிருந்தோர் ஆச்சரியஜ்யோதிமயம் ஆகாசமார்க்கமாய்ச் செல்ல அக்கால் எல்லா ஜனங்களும் கண்டு பிரமித்து ஆனந்தங்கொள்ள ஆகாயமிருந்து பூமாரி பொழிந்தது. வேத உத்தமர்களான அந்தணர்களின் வேதவொலிகீதமும், சிஷ்யர்கள் செய்யும் பகவான் பஜனகீர்த்தனகோஷமும் முழங்க எங்ஙும் மகோத்ஸவம் கொண்டாடி சந்நியாஸம்பூண்ட திருமேனியைக்காவிரிக்கரை அருகில் ஸமாதிசெய்து மகாபிஷேகாதிகள் நடத்தி பிருந்தாவனம் அமைத்து இவர் பிரும்மஸ்வரூபமாகிய நல்லநாளில் இவருக்குப் பிரதிவருஷங்களிலும் மகோத்ஸவம், பிராம்மண சமாராதனையோடு அதிமேன்மையாய் நடந்தேறியும் வருகின்றது. சுபம்.

வ. சி. நா. சிதம்பரம்பிள்ளை.

த ர் ம ம்.

(சOக-வது பக்கத்தொடர்ச்சி).

பார்த்தீர்களா! கலியுகத்தைப்பற்றி மகரிஷிகள் எவ்வளவு கவனித்திருக்கிறார்கள் இதைக்காட்டிலும் இனி எவ்வளவு சொல்லவேண்டும். பராசரஸ்மிருதியில்தான் பிராம்மணர்கள் யாகாதிகள் செய்யாமற்போனாலும் அவ்வளவு பாபமில்லையென்றும் கிருஷிமுதலியன செய்வதால் பாதகமில்லையென்றும் சொல்லியிருக்கிறார். இதையே அனுஸரித்து,

दुर्भिक्षं कृषितो नहीति जगति ख्यातं किल ब्राह्मणा
मापद्धर्मतया मनोश्च कृषिगोरक्षादिकं संमतं ।
भूपेष्वर्धपरेषु हन्त समये क्षुण्णे च दुर्भिक्षतो
वृत्त्यर्थं कृषिमाश्रयाम्यगतिको दैवं सहायोऽस्तु मे ॥

கிருஷியினாற்பஞ்சமில்லையென்று உலகில்ப்ரஸித்தமல்லவா! பிராம்மணர்களுக்கும் ஆபத்தர்மத்தில் மனுவினால் கிருஷி பசுபாலனம் முதலியன ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசர்கள் பணத்தாசையாலாழ்ந்தபோதும் காலமும் பஞ்சத்தினால் வருந்தும்போது பிழைப்பிற்காக வேறு கதி இல்லாமல் கிருஷியையடைகிறேன். எனக்குத் தெய்வம் ஸகாயமாய் இருக்கட்டும்,

என்று சுமார் 300-வருடங்களுக்கு முன்னால் தஞ்சாவூரில் சூத்திர அரசர்களால் கஷ்டப்பட்ட பாலகவியென்பவர் மகிஷசதகத்தில் எழுதிவைத்தார். இதனாலும் வர்ணத்தையும் ஆசிரமத்தையும் மாற்றிக்கொள்ளவில்லையென்றும் அப்படி மாற்றுவது வேதவிருத்தமென்பதையும் காண்பித்தார். இதனாலெல்லாம் நமக்கேற்பதை இஷ்டப்படி மாற்றமுடியாதென்றும் எக்காலத்திலும் தர்மஸ்வரூபம் ஒன்றேதானென்றும் ஏற்பட்டது. காமசாஸ்திரமெழுதிய வாத்ஸியாயனரும் தர்மத்தைப்பற்றி,

अलौकिकत्वाददृष्टार्थत्वादप्रवृत्तानां यज्ञादीनां शास्त्रात्प्रवर्तनं लौकिकत्वात् दृष्टार्थत्वाच्च प्रवृत्तेभ्यश्च मांसभक्षणादिभ्यः शास्त्रादेव निवारणं धर्मः तं श्रुतेर्धर्मज्ञसमवायाच्च प्रतिपद्येत ।

அலௌகிகமாய் இருப்பதாலும் அதிஷ்டப்பிரயோஜனமுள்ளதாய் இருப்பதாலும் பிரவர்த்திக்காத யக்ஞம் முதலியவைகளில் சாஸ்திரத்தினால் பிரவர்த்திப்பதும், லௌகிகமாயும் காணப்பட்ட பிரயோஜனமுள்ளதாயிருப்பதாலும் தானாய்ப்பிரவர்த்தித்த மாமிசம் தின்னல் முதலியனதினின்றும் சாஸ்திரத்தினால் தடுப்பதுமதான் தர்மமெனப்படும்.

அத்தகைய தர்மத்தை வேதத்தினின்றும் தர்மமறிந்தவர்களது கூட்டத்தினின்றும் தெரிந்துகொள்ளவேண்டும் என்றார். அவரே இன்னொரு இடத்திலும்,

न धर्मांश्चरेत् । एष्यत्फलत्वात् । सांशयिकत्वाच्च । कोह्य बालिशो हस्तगतं परगतं कुर्यात् । वरमद्यकपोतः श्वो मयूरात् । वरं सांशयिकान्निष्कादसांशयिकः कार्षापण इति लोकायातिकाः । शास्त्रस्यानभिशंकितत्वादभिचारानुव्याहारयोश्च क्वचित्फलदर्शनान्नक्षत्रचन्द्रसूर्यताराग्रहचक्रस्य लोकार्थं बुद्धिपूर्वकमिव प्रवृत्तेर्दर्शनात् वर्णाश्रमाचारस्थितिलक्षणत्वाच्च लोकयात्राया हस्तगतस्य च बीजस्य भविष्यतस्सस्यार्थे त्यागदर्शनाच्चरेद्धर्मानिति वात्स्यायनः ॥

தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது. வரப்போகிற பலனை எதிர்பார்ப்பதால் ஸம்சயமாய் இருப்பதாலும் மூடனைத் தவிர எவன் தான் தன் கையிலிருப்பதைப் பிறருக்குக் கொடுப்பான். நாளை கிடைக்கப்போகிற மயிலைக்காட்டிலும் இன்றிருக்கும் புறாவானது மேலானது. நிச்சயமில்லாமலிருக்கிற பவுனைக்காட்டிலும் நிச்சயமாய்க்கிடைக்கிற காசு போதும் என்று லோகாயதிகர்களின் கூற்று. சாஸ்திரங்களைப் பற்றி ஸம்சயிக்க இடமில்லாததாலும் ஆபிசாரப்பிரயோகம் சூன்யம் வைப்பது முதலியவைகள் பலவிடங்களில் பயனுள்ளவையாய் இருப்பதாலும் நக்ஷத்திரம் சந்திரன் சூரியன் முதலிய கிரக சக்கிரங்கள் லோகத்திற்காக புத்தியோடு பிரவர்த்திப்பதாய்க் காணப்படுவதாலும் லோகயாத்திரைக்காக வர்ணாசிரமாசாரத்தின் இருப்புக்கு லக்ஷணமாய் இருப்பதாலும் கையிலிருக்கிற விதையை வாப்போகிற பயிர் லாபத்தை உத்தேசித்து பூமியில் போடுவதைப் பார்ப்பதனாலும் தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று வாத்ஸ்யாயனர் அபிப்பிராயப்படுகிறார் என்றார். (இன்னும் வரும்.)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி